தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 23-5-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 37வது வருடாந்திரப் பட்டமளிப்பு விழா வருகின்ற ஜுலை அல்லது ஆகஸ்ட் மாதத்தில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்தால் 31-3-2016 அன்று அல்லது அதற்கு முன்னர் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட மாணவ மாணவியர்களிடமிருந்து பட்டங்கள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பப்படிவம் மற்றும் இதர விவரங்களைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணையதளமான **www.tnau.ac.in** மூலம் பதிவிறக்கம் செய்து 23-5-2016 முதல் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப கட்டணத்தை பல்கலைக்கழக இணைய தளத்தின் மூலம் செலுத்த வேண்டும்.

இப்பட்டமளிப்பு விழாவிற்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய இணைப்புகளுடன் (அதாவது தற்காலிக பட்டப்படிப்பு சான்றிதழின் (PC) நகல் மற்றும் இணையதளம் மூலமாக வங்கியில் செலுத்தப்பட்ட கட்டணத்திற்கான இரசீது) இப்பல்கலைக்கழகத்திற்கு 1-7-2016-ம் தேதிக்குள் வந்து சேர வேண்டும். மேலும் இது சம்பந்தமான விபரங்கள் அறிய விரும்புவோர் 0422-6611506 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்